**சிலாபம் பிரதேச சபை - 2022**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சிலாபம் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிரந்தர ஊழியர் சம்பளம் ரூபா 352,386 குறைத்து பதயப்பட்டதனால் சம்பள மீளளிப்பு மற்றும் நடைமுறைச்சொத்துக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 10,275,357 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | முன்னைய ஆண்டில் வைப்புக் கணக்கில் பதியப்பட்டிருந்த ரூபா 70,246 வருமானத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 803,261 தொகையான கடன்கொடுத்தோர் மிகையாகப் பதியப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,837 தொகை தீர்த்துவைக்கப்படாது தொங்கல் கணக்கில் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோருக்கு வரவுவைக்கப்பட வேண்டிய ரூபா 299,405 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களும் பட்டோலைகளுக்குமிடையே ரூபா 13,038,704 கூட்டுமொத்த பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் போது இந்த மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளிலுள்ள மீதிகளையும் கணக்கு மீதிகளையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (அ) நி.பி 371 (இ) | உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் ரூபா 193,391 தொகையான முற்பணம் தீர்த்துவைக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நி.பி 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,309,994 தொகையான வைப்புக்கள் தீர்த்துவைக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 87,785,753 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 124,403,348 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்ப ட்ட வருமானம் ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா '000 | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா '000 | பட்டியலிட ப்பட்ட வருமானம் ரூபா '000 | சேகரிக்கப்ப ட்ட வருமானம ரூபா '000 | திசெம்பர் 31 இல் உள்ளவா றான நிலுவை ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 9,393 | 11,352 | 9,331 | 5,096 | 9,058 | 8,940 | 6,927 | 2,012 |
| வாடகை | 10,153 | 11,904 | 9,755 | 3,041 | 9,614 | 5,486 | 5,155 | 332 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 1,380 | 980 | 980 | 360 | 1,449 | 1,092 | 1,092 | - |
| ஏனைய வருமானம் | 37,641 | 11,384 | 11,263 | - | 176,450 | 189,757 | 27,045 | 162,125 |
| | ....... | ......... | ......... | ........... | ...... | ......... | ........ | ........... |
| மொத்தம் | 58,567 | 35,620 | 31,329 | 8,497 | 196,571 | 205,275 | 40,219 | 164,469 |
| | ......... | ......., | ........ | ....... | ........ | ....... | ......... | ........... |

**2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி ரூபா 4,798,560, நிலுவையான ஏக்கர் வரி ரூபா 297,186, நிலுவையான வாடகை ரூபா 3,401,752 என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 327,898,852 ஆக இருந்ததுடன் ஒரு ஆண்டினை மிகைத்த ரூபா 215,689,852 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 84,948,873 ஆகும். | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டு வருகின்றது. | புதிய மதிப்பீட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க வருமானம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகாரப் பிரதேசத்தினுள் பொறுப்பேற்க்கப்படாத ஆதனங்கள் 53 ஆகும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பொருள் மீளாய்வு அறிக்கைக்கு இணங்க பற்றாக்குறைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட்கள் மீளாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 1,446,719 பெறுமதியான 04 ஒப்பந்தங்களானது அந்த ஒப்பந்தங்கள் குறைபாடுகளுடன் இருந்தமையின் காரணமாக ரூபா 160,746 தொகையான பணம் விடுவிக்கப்படாதிருந்ததுடன் குறைபாடுகளுடனான நிர்மாண வேலைகளை உரிய ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தெரியப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறைபாடுகளுடனான நிர்மாண வேலைகளை உரிய ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 01 இரண்டாம் மட்ட பதவியும் 34 ஆரம்ப மட்ட பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இன்றுவரை அது தொடர்பாக முறையான பதில் கிடைத்திருக்கவில்லை. | சபைக்கு தேவையான ஆளணியினரை சரியாக இனங்கண்டு அந்த ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளின் போது சேவையை கைவிட்டுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 47 ஊழியர்களிடமிருந்து ரூபா 338,810 மீதி அறவிட வேண்டி இருந்தது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் ஒரு உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் சபையின் உள்ளகக் கணக்காய்வினால் விடுமுறை, களஞ்சியம், இணக்கப்பாட்டு சான்றிதழ் என்பவற்றை பரீட்சித்தல் தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முக்கியமான துறைகளை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வினைத் திட்டமிட்டு கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4.2. பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் 113 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 22,057,270 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததன் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியுள்ளது. | பாதீடு செய்யப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக 77 செலவு விடயங்களுக்கு ரூபா 40,542,00 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கு குறைந்த அளவானவையே செலவு செய்யப்பட்டிருந்தது. | செலவுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டமையின் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியுள்ளது. | பாதீடு செய்யப்பட்ட அளவினை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |